**கவனிக்க.**- *2006.12.15 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1477 - 2006 දෙසැම්බර් 22 වැනි සිකුරාදා - 2006.12.22

*1477 ஆம் இலக்கம் - 2006 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 22 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (IIஆ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | 1196 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 1196 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச் சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்பனைகள் | 1197 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான*

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.** வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏல விற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும் பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.

வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்** இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2006, திசெம்பர் 29 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2006, திசெம்பர் 15 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2006 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## இலங்கைப் புகையிரத சேவைகள்

### இலங்கைப் புகையிரதப் பகுதிக்கு பெற்றோல் ராங் வகன்களுக்கான 12 போகிக்களை (12 Nos. Bogies for Petrol Tank Wagons) வழங்குவதற்கான கேள்விகள்

தலைவர், மந்திரிசபை கொள்வனவுக் குழு, புகையிரத போக்குவரத்து அமைச்சு, இல. 1, டீ. ஆர். விஜேவர்த்தன மாவத்தை, கொழும்பு 10, இலங்கையில் பெற்றோல் ராங் வகன்களுக்கான 12 போகிக்களை (12 nos. Bogies for Petrol Tank Wagons) வழங்குவதற்கான கேள்விகள் உற்பத்தியாளர்கள்/விநியோகத்தர்களிடமிருந்து ஏற்றுக்கொள்ளப் படுகின்றன. ஒப்பந்தக்காரர்கள் தமது விலைமனுக்களை நேரடியாகவோ அல்லது இலங்கையிற் பதிவு செய்யப்பட்டவர்களும் அதிகாரத் தத்துவம் பெற்றவர்களுமான அங்கீகரிக்கப்பட்ட முகவர்களினூடாக சமர்ப்பிக்கலாம்.

2. மீளப்பெறப்பட முடியாத கேள்விப்பணமாக ரூபா 10,000 ஐ அல்லது அதற்குச் சமமான இலகுவாக மாற்றீடு செய்யக்கூடிய தொகையைச் செலுத்துவதன் மூலம் புகையிரதக் களஞ்சிய அத்தியட்சகர் காரியாலயம், ஓல்கொட் மாவத்தை, கொழும்பு 10, இலங்கையில் அல்லது வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்களிலிருந்து 2006.12.01 ஆந் திகதியிலிருந்து 2006.12.21 ஆந் திகதி வரையிலான சாதாரண வேலை நாட்களில் முற்பகல் 10.00 மணிக்கும் பிற்பகல் 3.00 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் (இலங்கை நேரம்) பெறப்படும் கேள்விப்பத்திரங்களில் மட்டுமே கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

3. கேள்விகள் 2006.12.21 பிற்பகல் 2.00 மணிக்கு (இலங்கை நேரம்) மூடப்படும். சீலிடப்பட்ட கேள்விகளை பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ கையளிப்பதன் மூலமாகவோ பின்வரும் முகவரியிற் சமர்ப்பிக்கலாம் :-

தலைவர்,
அமைச்சரவை கொள்வனவுக் குழு,
மே/பா. செயலாளர், புகையிரத போக்குவரத்து அமைச்சு,
இல. 1, டீ. ஆர். விஜேவர்த்தன மாவத்தை,
கொழும்பு 10,
இலங்கை.

புகையிரத போக்குவரத்து அமைச்சு அல்லது புகையிரத திணைக்களம் பதிவுத் தபாலின் தாமதத்திற்கு பொறுப்பேற்க மாட்டாது.

4. மேலே பந்தி (03) இல் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் கேள்விகள் திறக்கப்படும். கேள்வி ஒப்பந்தக்காரர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் கேள்விகள் திறக்கப்படும்போது சமூகமளிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படு கின்றனர்.

5. கேள்விப்பத்திர ஆவணங்களை எந்தவித கட்டணங்களுமின்றி புகையிரதக் களஞ்சிய அத்தியட்சகர் அலுவலகம், ஓல்கொட் மாவத்தை, கொழும்பு 10, இலங்கையில் பரிசீலிக்கலாம்.

6. மேலதிக விபரங்களுக்குத் தயவுசெய்து பின்வரும் முகவரியிற் தொடர்புகொள்ளவும் :-

புகையிரதக் களஞ்சிய அத்தியட்சகர்,
புகையிரத களஞ்சியத் திணைக்களம்,
ஓல்கொட் மாவத்தை,
கொழும்பு 10,
இலங்கை.

தொலைபேசி இலக்கங்கள் : 94(11)2432044
அல்லது 94(11)2436818
பக்ஸ் இல. 94(11)2432044
மின் அஞ்சல் : srs@sierra.lk

தலைவர்,
மந்திரிசபை கொள்வனவுக் குழு.

தொடர்பு இலக்கம் : எஸ். ஆர். எஸ்./எவ். 6531

12-688

---

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அட்டோர்ணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

மெதமகநுவர, துனுவில, ஹங்குருகமவத்தை, சதசிரியில் வசிக்கும் ராஜபக்ஷ ஆரச்சிகே காமினி டயனேஷியஸ் வீரசேகர ஆகிய நான், வெளிநாடு சென்றிருந்த வேளையில் என்னால் மற்றும் என் பெயரில் செயற்படுவதற்கு எனது அட்டோர்ணித் தத்துவதாரராக மெதகமநுவர, துனுவில, ஹங்குருகமவத்தை, 'சதசிரியில்' வசிக்கும் பெனடிக் ஜோசப் ஸ்டாலின் பெர்னாந்து (தே. அ. அ. இல. 650400429 V) ஆகியவருக்கு பிரசித்த நொத்தாரிசு கயந்தி கீத்தான்ஜலி திஸாநாயக்க அவர்களினால் எழுதி உறுதிப்படுத்தப்பட்ட இல. 395 மற்றும் 2004.06.01 ஆந் திகதிய அட்டோர்ணித் தத்துவத்தின் மூலம் அதிகாரம் வழங்கப்பட் டிருந்ததோடு, நான் 2006.11.20 ஆந் திகதி முதல் இலங்கைக்கு வந்ததால் மேற்குறிப்பிட்ட இல. 395 அட்டோர்ணித் தத்துவத்தை 2006.11.20 ஆந் திகதி முதல் இரத்துச்செய்து மற்றும் அதிகாரமற்ற ஆவணமாக்கப்பட்டுள்ளது என்பதனையும், இன்று தொடக்கம் எனது அட்டோர்ணித் தத்துவதாரரினால் இவ் அட்டோர்ணித் தத்துவத்தின் பேரில் செய்யப்படும் அனைத்து நடவடிக்கைகளும் செல்லுபடியற்றதாகிறது என்பதனையும், அனைவரினதும் கவனத்திற்குமென இவ் அறிவித்தலை பிரசுரிக்கிறேன்.

ராஜபக்ஷ ஆரச்சிகே காமினி டயனேஷியஸ் வீரசேகர.

12-721

### அட்டோர்ணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

கலென்பிந்துனுவெவ 21 ஆம் குடியிருப்பு திட்டத்தில் (மேற்கு) இல. 105 என்ற முகவரியைச் சேர்ந்த டிகிரிபண்டாகே விமலாவதி ஆகிய என்னால், பகிரங்க நொத்தாரிசு பிரியதர்ஷினி அத்தநாயக்க என்பவரால் உறுதிப்படுத்தப்பட்ட 2005.11.30 ஆந் திகதியும் 66 ஆம் இலக்கமும் கொண்ட விசேட அட்டோர்ணி தத்துவ மூலம் கஹடகஸ்திகிலிய கெபிதிகொல்லேவ வீதியில் வதியும் தனபாலகே மகேந்திர அரம்பல என்பவருக்கு வழங்கப்பட்ட விசேட அட்டோர்ணி தத்துவம் இரத்துச் செய்யப்படுகின்றதெனவும், இனிமேற்பட்டு இந்த அட்டோர்ணி தத்துவம் செல்லுபடியாகாதெனவும் இத்தால் எல்லோருக்கும் அறிவிக்கப்படுகிறது.

டிகிரிபண்டாகே விமலாவதி.

12-731

---

## ஏல விற்பனைகள்

### டீ. எப். சி. சி. வங்கி

(முன்பு இலங்கை அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபனம்)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன் மீட்புச் சட்டத்தின் (விசேட ஏற்பாடுகள்) 8 ஆம் பிரிவின்கீழான விற்பனை

**விலைமதிப்பான காணியொன்றின் ஏல விற்பனை**

*10603 ஆம் இலக்கம் கொண்ட பிணை உறுதிகளின்கீழ் அடகு வைக்கப்பட்ட சொத்தின் விபரம்* .- ஊவா மாகாண பதுளைப் பிரதேசத்தில் யட்டிக்கிந்த பிரிவின் போகொட கோரளையில் உள்ள ஹாலிஎலை நகரத்தில் உள்ள கன்னிலக்கும்புர (இப்போது உயர்நிலம்) என்றழைக்கப்பட்ட நிலப்பரப்புக்குள் முழுமையாக அடங்கிய உரிமைபெற்ற நில அளவையாளர் எம். பைசி பவுட் இஸ்மாயில் என்பவரால் 2003, யூலை 29 ஆந் திகதி அன்று நிலவரைப்படம் இல. 469 இல் நிலத்துண்டு 03 என பிரித்தெழுதப்பட்டது. விஸ்தீரணம் 0ஏ. 0றூ. 12.30பே. பதுளை வீதியில் வரிமதி இல. 20/11 கொண்டது ; கட்டிடம் மற்றும் அங்குள்ள யாவும் சேர்ந்து ஹாலிஎலவைச் சேர்ந்த முனசிங்க ஹெட்டியாராச்சிகே சிரிமால் ஷாந்த ரத்னபால, போதமி ஆரியனாத்த பிரேமதாச ஆகியோரால் 2004, நவெம்பர் 3 ஆந் திகதி அன்று பிணை உறுதி இல. 10603 ஐ பதுளைப் பொது நொத்தாரிசு ஐ. எம். பி. ஆனந்த என்பவருக்கு முன்னிலையில் அத்தாட்சிப்பெற்று கொடுப்பனவு செய்யமுடியாத பட்சத்தில் டிஎப்சிசி வங்கிக்கு ஈடுசெய்யப்பட்டது. டிஎப்சிசி வங்கியினால் எமக்கு அளிக்கப்பட்ட அனுமதிப்படி 2007, சனவரி 10 ஆந் திகதி புதன்கிழமை மு. ப. 11.00 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**கொடுப்பனவு செலுத்தும் முறை**.- சித்திகரமான கொள்வனவாளர் ஏலம் முடிவில் பின்வரும் கட்டணங்களை பணமாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையில் 10% ;

(2) உள்ளூர் அதிகார சபைக்கு செலுத்தப்படவேண்டிய 1% விற்பனை வரி ;

(3) விற்பனை விலையில் ஏலதாரர் தரகு 2 1/2% (இரண்டரை வீதம்) ;

(4) ரூ. 20,000 க்கு மேற்படாத மொத்த விளம்பரச் செலவின் 50% ;

(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணம் ரூ. 500 ;

(6) விற்பனை நிபந்தனைகளுக்கு நொத்தாரிசு கட்டணம் ரூ. 2,000.

கொள்முதல் விலையின் மீதி 90% விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் சட்டரீதியான விதிப்பனவுகள், தீர்வைகள், வரிகள் அல்லது இலங்கை அரசாங்கத்தினால் அல்லது வேறு ஏதாவது அதிகாரசபையினால் அவ்வப்போது விதிக்கப்படுகின்ற கட்டணங்களுடன் செலுத்தப்பட வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு "டீ. எவ். சீ. சீ. வங்கியின் சட்டத் திணைக்களத்தை" தொலைபேசியில் தொடர்புகொள்ளவும். தொலைபேசி இல. : 011-2440366.

சொக்மன் அன்ட் சமரவிக்ரம,
ISO 9001 : 2000 அத்தாட்சிபெற்ற
இலங்கையின் கீர்த்திவாய்ந்த பட்டய ஏலதாரர்,
மற்றும் ஆலோசக மதிப்பீட்டாளர்.

| தலைமை அலுவலகம் : | நகர அலுவலகம் : |
|---|---|
| 24, டொரிங்டன் பாதை, | 290, ஹவ்லொக் பாதை, |
| கண்டி. | கொழும்பு 05. |
| தொலைபேசி : 081-2227593 | தொலைபேசி இல. : 2585408 |
| தொலைநகல் : 081-2224371 | தொலைநகல் : 2588176 |
| | மின்னஞ்சல் : samera@srilanka.net |

12-718

## செலான் வங்கி லிமிட்டெட்-தனியார் வங்கிப் பிரிவு

*1990 ஆம் ஆண்டின் வங்கியினால் கடன்களை மீள அறவிடுதல் 4 ஆம் இலக்க சட்டத்தின் (விசேட ஏற்பாடுகள்) 4 ஆம் பிரிவின்கீழ் விற்பனை*

### காணி ஏல விற்பனை

*(கடன்பட்டார் என்ற வகையில் பண்டாரவளையைச் சேர்ந்த செல்லையா பிரகாஷ் என்பவருக்கு வழங்கப்பட்ட சலுகைகளுக்காக செலான் வங்கி லிமிட்டெட்டிற்கு ஈடுவைக்கப்பட்ட காணி.)*

மேலே விபரிக்கப்பட்டுள்ள காணியை நான் 2007, சனவரி 11 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலத்தின்மூலம் விற்பனை செய்யவுள்ளேன்.

**ஆதனத்தின் விவரணம்.**- ஊவா மாகாணம், பதுளை மாவட்டம், யட்டிகிந்த பிரிவு கும்பால்வெவ கோரளே இடமகம மற்றும் பட்டியகும்புரயில் அமைந்துள்ள இரத்தினகிரி தோட்டம் என்றழைக்கப்படுகின்ற அனுமதிபெற்ற நில அளவையாளர் எம். டபிள்யூ. ஒரெப்டன் ஐ. எஸ். இனால் அளந்து எல்லைகள் வரையறுக்கப்பட்ட வரைவு இல. 1344 மற்றும் 1950, பெப்புருவரி மற்றும் நவெம்பர் திகதிகளையுடைய பன்னிரண்டு ஏக்கர் இரண்டு றூட் பதின்மூன்று பேர்ச்சஸ் (12ஏ. 2றூ.13பே.) பரப்பளவு கொண்ட பெறுமதிவாய்ந்த காணி மற்றும் அதில் அமைந்துள்ள மரம், செடி, கொடிகள் அடங்கலாக அங்கே உள்ள அனைத்தும்.

மேற்படி காணி அனுமதி பெற்ற நில அளவையாளர் யூ. நிமல் பீ. விஜேவீரவினால் மீள அளந்தும், மீளப் பிரித்தும் வரையப்பட்ட வரைவு இல. 8024 இன்படி ஊவா மாகாணம், பதுளை மாவட்டம் யட்டிகிந்த பட்டியகும்புரவில் அமைந்துள்ள இரத்னகிர என்றழைக்கப்படுகின்ற துண்டு இல. 1 இன் பிரகாரம் மூன்று ஏக்கர் (03ஏ.0றூ.0பே.) பரப்பளவு கொண்டதும் மற்றும் துண்டு இல. 03 இன் பிரகாரம் ஒன்பது ஏக்கர் ஒரு றூட் ஒன்பது பேர்ச் (9ஏ.1றூ.09பே.) பரப்பளவு கொண்ட பெறுமதி வாய்ந்த காணி மற்றும் அதில் அமைந்துள்ள மரம், செடி கொடிகள் அடங்களாக மேற்படி ஆவணம் பாகம் 01/ பிரிவு 01 இன்கீழ் பதுளை காணிப்பதிவகத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

**காணியைச் சென்றடைகின்ற வழி.**- பண்டாரவளை நகரத்திலிருந்து பதுளை வீதி ஊடாக சுமார் 10.5 கி. மீற்றர் சென்று வலதுபுறமாகத் திரும்பி 800 மீ. சென்று 27 ஆம் கி. மீ. கல்லைத் தாண்டி இரத்னகிரி தோட்டம் வீதி வரை தார் இடப்பட்ட பிரதேச சபை வீதியூடாக எல்ல நகரத்தை சென்றடையவும். பின்னர் சுமார் 500 மீற்றர் வரை செல்லவும். செம்மண் வீதியில் குறித்த காணிக்காக ஒதுக்கப்பட்ட வீதியின் வலதுபுறமாக தேயிலைத் தோட்டத்தின் ஊடாக இடது மற்றும் வலது புறமாக அமைந்துள்ளது. குறித்த காணி இரத்னகிரி தோட்டத்தின் ஒரு பாகமாகும்.

**மேலதிக விபரங்களுக்கு.**- 2006.12.01 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானி மற்றும் 2006.11.13 ஆந் திகதிய "டெயிலி மிரர்", "லங்காதீப" மற்றும் "வீரகேசரி" நாளிதழ்களையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செலுத்தும் முறை.**- வெற்றிகரமான கொள்வனவு தாரர் ஏலவிற்பனை முடிவில் பின்வரும் தொகைகளைக் காசாகச் செலுத்தல் வேண்டும் :-

கொள்வனவு விலையின் பத்து வீதம் (10%), விற்பனை வரியாக உள்ளூர் அதிகாரசபைக்குச் செலுத்தவேண்டியது ஒரு வீதம் (1%), ஏலதாரர் கட்டணமாக இரண்டரை வீதம் (2 1/ 2%), விற்பனை நிலத்துக்கான நொத்தாரிசு உறுதிப்படுத்தல் கட்டணம் ரூபா 2,000, இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணம் ரூபா 500, விற்பனையின் பேரில் செலவிடப்பட்ட மொத்த விளம்பரச் செலவு,

கொள்வனவு விலையில் மிகுதி 90% விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலான் வங்கி லிமிட்டெட்டில் வைப்புச்செய்தல் வேண்டும்.

காணி உறுதி மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட ஆவணங்களை "கொழும்பு 3, காலி வீதி, இல. 90, செலான் வங்கி லிமிட்டெட், பிரதிப் பொது முகாமையாளர் (சட்டம்)" இடமிருந்து பெற்றுக்கொள்ளவும் முடியும். தொலைபேசி இல. : 2456285, 2456284, 2456263.

துசித கருணாரத்ன,
அனுமதிபெற்ற ஏலதாரர்,
நீதிமன்ற ஆணையாளர்.

ரி. அன்ட் எச். ஒக்சன்,
இல. 50/3, விஹார மாவத்தை,
கொலொன்னாவை,
தொலைபேசி இல. : 2696155, 2572940.

12-719

---

## கமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் லிமிட்டெட்-மகரகம கிளை

ஆதனமும் வளவுகளும் ஏல விற்பனை

*(கடன் எடுத்த இஜ்னா ஜெம்ஸ் ஜுவலரி என்ற பெயரில் பங்குதாரர்களாக வியாபாரம் செய்யும் ரோஹான் வக்வெல்ல அல்லது நம்புகார வக்வல்லகே ரோஹான் சந்திரசிரி மற்றும் அணா லக்மாலி கஜசிங்க என்பவர்கள் காணியை கமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் லிமிட்டெட்டிற்கு ஈடுவைத்துள்ளார்கள்.)*

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் வரையறுக்கப்பட்ட கமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் லிமிட்டெட் பணிப்பாளர்களினால் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின்கீழ் விவரிக்கப்பட்ட ஆதனமும் வளவுகளும் என்னால் அதே இடத்தில் பகிரங்க ஏலமூலம் விற்பனை செய்யப்படும் :-

2007, சனவரி மாதம் 12 ஆந் திகதி காலை 11.30 மணிக்கு மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், பல்லேபத்து சல்பிட்டி கோரளையில் எரவ்வல்ல கிராமத்தில் அமைந்துள்ள மொரகாவத்த என்ற காணியின் நில அளவையாளர் மேர்வின் சமரநாயக்கவின் 08.03.1988 ஆந் திகதியுடைய வரைபடம் இலக்கம் 2198 இல் காண்பிக்கப்பட்ட பகுதிபடுத்திய காணித்துண்டான லொட் 17-இக்காணியின் விஸ்தீரணம் 0ஏ. 0றூ. 20.3பே. மற்றும் இக்காணியில் அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், தாவரங்கள் எல்லாம் சேர்த்து.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்காக.**- தயவுசெய்து 19.05.2006 ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியையும், "லங்காதீப", "த ஐலன்ட்" மற்றும் "தினகரன்" பத்திரிகைகளையும், அத்துடன் ஏலவிற்பனை

விளம்பரத் துக்காக 22.12.2006 ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியையும், 22.12.2006 ஆந் திகதியுடைய "லங்காதீப", "த ஐலன்ட்" மற்றும் "தினகரன்" பத்திரிகைகளைப் பார்க்கவும்.

**காணிக்குச் செல்லும் விதம்.**- பண்ணிபிட்டிய, மொரகட்டிய சந்தியில் இருந்து எரவ்வல்ல வீதியில் 1 கிலோ மீட்டர் தூரம் சென்று (கொஸ்ஹேன சந்தியில் இருந்து 75 மீட்டர் தூரம்) அதன் பிறகு இடதுபக்கம் திரும்ப தாவரங்கள் விற்பனைப் பலகையைத் தாண்டி பிரதேச சபையான தார் போட்ட பாதையில் 150 மீட்டர் சென்றால் இக்காணி இதே பாதையில் வலதுபக்கம் அமைந்துள்ளது.

**கொடுப்பனவு செலுத்தும் விதம்.**- ஏலவிற்பனையின் இறுதியில் உத்தேச கொள்வனவாளர் பின்வரும் கட்டணங்களை பணமாகச் செலுத்த வேண்டும் :

(1) கொள்வனவு விலையின் 10% ;

(2) உள்ளூராட்சி விற்பனை வரி 1% ;

(3) ஏலதாரரின் தரகுப் பணம் 2.5% ;

(4) விற்பனைப் பத்திரம் தயாரிப்பதற்கான நொத்தாரிசுக் கட்டணம் ரூபா 2,000 ;

(5) எழுதுவினைஞர் மற்றும் கூவுவோர் கட்டணம் ரூபா 500 ;

(6) ஏலத்திற்காக செலவு செய்யப்பட்ட எல்லா விளம்பரச் செலவுகள் ;

(7) கொள்வனவு விலையின் மிகுதி 90% ஏலத் திகதியில் இருந்து 30 நாட்களுக்குள் கமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் - மகரகம கிளையில் செலுத்த வேண்டும்.

உரித்து உறுதிகளையும் மற்றும் தொடர்பு ஆவணங்களையும் பின்வரும் இடத்தில் பெற்றுக்கொள்ள முடியும் :-

முகாமையாளர்,
கமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் லிமிட்டெட்,
இல. 154, ஹைலெவல் வீதி, மகரகம
தொலைபேசி இல. : 2850505, 2844915, 2844914
தொலைநகல் இல. : 2851232

எல். பி. சேனநாயக்க (ச. நீ.),
சிரேட்ட உத்தரவுபெற்ற ஏலதாரர் (அரசாங்க மற்றும் வர்த்தக வங்கிகள்), விலைமதிப்பிடுநர்,
மேலதிக வர்த்தக நீதிமன்றம் மற்றும் கொழும்பு மாவட்ட நீதிமன்ற ஆணையாளர்,

99, புதுக்கடை வீதி,
கொழும்பு 12.
தொலைபேசி/ தொலைநகல் : 011-2445393

12-720